**இலங்கை மஹாவலி அதிகாரசபை மற்றும் அதன் துணைக் கம்பனிகளை உள்ளடக்கிய தொகுதி - 2019**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை மஹாவலி அதிகாரசபை மற்றும் அதன் துணைக் கம்பனிகளை உள்ளடக்கிய தொகுதியின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் காரணமாக அதிகாரசபை மற்றும் அதன் துணைக் கம்பனிகளை உள்ளடக்கிய தொகுதியின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது ஆணைக்குழுவை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை

இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு ஆணைக்குழு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின்

பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அதிகாரசபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகாரசபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- அதிகாரசபையின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- அதிகாரசபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | உரிய நியமங்களின் தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அதிகாரசபை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் மற்றும் அதன் துணைக் கம்பனியின் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் | ஏற்றுக்கொள்கின்றோம். 2020 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களுடன் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கம்பனியால் பின்பற்றப்படுகின்ற கணக்கீட்டு நியமங்களின் காரணமாக |

| | | | |
|---|---|---|---|
| | முயற்சிகளுக்கான கணக்கீட்டு நியமத்தையும் பின்பற்றியிருந்த போதிலும், கம்பனியினால் பின்பற்றப்பட்ட அடிப்படையின் காரணமா நிதி கூற்றுக்களுக்கு ஏற்பட்ட தாக்கம் வெளிப்படுத்தப்படவில்லை. | | ஒன்றிணைந்த நிதிக் கூற்றுக்களின் தாக்கங்கள் வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் பிரகாரம் போதியளவான முழுமையான காலப்பகுதியில் சரியாக அவற்றை கண்டு அறிந்ததன் பின்னர் விநியோகிப்பதற்காக அங்கீகரிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் பிற்போட்ட ரீதியில் சீராக்கம் செய்யப்பட்டு ஒப்பீடு செய்யப்பட்ட பெறுமதி நிர்ணயிக்கப்பட்டு பிழைகளின் தன்மை மற்றும் சீராக்கப்பட்ட முறை தொடர்பாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டியிருந்த போதிலும், மொரகஹகந்த நீர் மின் உற்பத்தி கூடத்தில் முன்னைய ஆண்டுக்காக கிடைத்த ரூபா 496,770,000 வருமானம் மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களில் சீராக்கும் போது அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | முன்னைய ஆண்டுகளின் சீராக்கங்களின் அடிப்படையில் இலாபத்திற்கு ஏற்படும் தாக்கம் 2020 ஆம் ஆண்டின் நிதிச் செயலாற்றல் கூற்றில் தனியாக காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | முழுமையான காலப் பகுதியிலும் சரியாக பிற்போட்ட ரீதியில் சீராக்கப்பட்ட ஒப்பீட்டு ரீதியான பெறுமதி நிர்ணயிக்கப்பட்டு நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (இ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் பிரகாரம் ஒன்றிணைந்த நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட ரூபா 210,567,000 பெறுமதியான விவசாய மற்றும் கால்நடை வள இருப்பின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்ட முறை மற்றும் அதற்குரிய கணக்கீட்டு கொள்கைகள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 01 இன் பிரகாரம் கால்நடை வள இருப்பின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்ட முறை தொடர்பான குறிப்பொன்று 2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக நிதிக் கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | இருப்பு பெறுமதியிடல் விபரம் மற்றும் கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றை நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்துதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 49 ஆவது பந்தியின் பிரகாரம் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் மீள்மதிப்பீடு செய்யும் போது உரிய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் வகுப்பு மீள்மதிப்பீடு செய்ய வேண்டிய | இலங்கை மஹாவலி அதிகார சபையின் ஏனைய அலுவலகங்களுடன் ஒப்பிடும் போது பிரதான அணை மற்றும் நீர்த் தேக்க செயற்பாட்டு பிரிவின் பணிப்பொறுப்பு பொறியியலாளர் அலுவலகம் சில மாவட்டங்களில் பரவலாக்கப்பட்டிருந்ததுடன், | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் சரிசெய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | போதிலும், 2019 சனவரி 01 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட அதிகார சபையின் மோட்டார் வாகனங்களை மீள்மதிப்பீடு செய்யும் போது நியமத்தின் விதிகளுக்கு முரணாக பராமரிப்பு பிரிவு மற்றும் பிரதான அலுவலகத்தில் காணப்பட்ட முறையை கிரயம ரூபா 175,599,150 மற்றும் ரூபா 60,648,350 தொகையான மோட்டார் வாகனங்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | மோட்டார் வாகனங்களை மீள்மதிப்பீடு செய்வதற்காக அந்த மாவட்டங்களில் மோட்டார் வாகன பரிசோதகர்களை பங்குபற்றச் செய்தல் வேண்டும். அவர்களை பங்குபற்றச் செய்வதற்கு அவர்களின் கடமை சிக்கல்களில் அடிப்படையில் வசதியீனமாகும். எவ்வாறாயினும் தற்போது சகல பணிப்பொறுப்பு பொறியியலாளர் அலுவலகங்களிலும் மீள்மதிப்பீட்டு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 2020 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (உ) | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் 47 ஆம் பந்தியின் பிரகாரம் நியாயமான பெறுமதி கவனத்தில் கொள்ளக்கூடிய அளவு வேறுபடுமாயின் மற்றும் விரைவாக மாற்றமடைகின்ற சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு நியாயமான பெறுமதி கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும், அதிகார சபையினால் 1984 – 1989 காலப்பகுதியின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 64,320,853 கிரயமான 02 காணிக் கூறுகள் தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன், அவற்றின் கிரயமேனும் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | மஹாவலி அதிகார சபையினால் ரூபா 64,320,853 பெறுமதியில் கொள்வனவு செய்யப்பட்ட இலக்கம் 500, டி.பீ. ஜயா மாவத்தை, கொழும்பு 10 மற்றும் இலக்கம் 493 என்ற 02 காணிக் கூறுகளின் மதிப்பீட்டு பெறுமதியை பெற்றுக்கொள்வதற்காக மதிப்பீட்டு திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருந்ததுடன், அந்த மதிப்பீட்டு பெறுமதி கிடைத்த பின்னர் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அதிகார சபைக்குரிய சொத்துக்களை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டு கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| புனருத்தாபனம் மற்றும் அபிவிருத்தி செய்யும் செலவினங்களில் உருவான மூலதன தன்மையுடைய சொத்துக்கள் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்வதற்கு பொருத்தமான கணக்கீட்டு கொள்கையொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2019.12.31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டில் ஒன்றிணைந்த நிதிக் கூற்றுக்களில் கணக்கீட்டு கொள்கையின் கீழ் இது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் ,அவ்வாறு கணக்கீடு | புனருத்தாபனம் மற்றும் அபிவிருத்தி செய்யும் செலவினங்களில் இருந்து உருவான மூலதன தன்மையான சொத்துக்களை கணக்கீடு செய்வதற்கு பொருத்தமான கணக்கீட்டு |

| | | |
|---|---|---|
| | செய்வதற்கு வலையம் / பிரிவுகளுக்கு அறிவிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கொள்கையொன்று அறிமுகப்படுத்தப்பட வேண்டும். |

**1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ஒன்றிணைந்த நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட குறிப்புக்களின் பிரகாரம் ரூபா 82.61 பில்லியன் கிரயமான 12 பிரதான அணை மற்றும் 919 கிலோ மீற்றர் பிரதான வாய்க்கால்கள், 7,789 கிலோ மீற்றர் ஏனைய வாய்க்கால்கள், 463 குளங்கள் மற்றும் 1,127.5 கிலோ மீற்றர் வீதிகள் என்பன மஹாவலி அதிகார சபையினால் பராமரிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த சொத்துக்களை மதிப்பிட்டு நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 2018 திசெம்பர் 21 ஆம் திகதி அதிகார சபையினால் கையேற்கப்பட்டிருந்த மொறகஹகந்த நீர் செயற்திட்டத்தின் சொத்துக்கள் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பிரதான வாய்க்கால் அணை, வாய்க்கால் வீதிகள், ஏனைய வாய்க்கால்கள் மற்றும் குளங்களின் கிரயம் ரூபா 82.61 பில்லியன் ஆக 2019 ஆம் ஆண்டில் ஒன்றிணைந்த நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ள குறிப்புக்களில் காண்பிக்கப்பட்டுள்ளது. அந்த சொத்துக்கள் மதிப்பீட்டு திணைக்களத்தில் மதிப்பீடு செய்வதற்கு முடியாத சொத்துக்களாக இருந்தமையால் அதனை என்னால் நியமிக்கப்பட்ட பட்டைய பொறியியலாளர் மற்றும் பட்டைய மதிப்பீட்டாளர்கள் ஏற்றுக் கொள்ளப்பட்ட உள்ளக குழுவொன்றி மூலம் மதிப்பீடு செய்யப்பட்டு எதிர்வரும் ஆண்டுகளில் நிதிக் கூற்றுக்களில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மொறகஹகந்த களுகங்கை அபிவிருத்தி செயற்திட்டத்தின் மூலம் இலங்கை மஹாவலி அதிகார சபைக்கு கையளிக்கப்பட்ட ரூபா 49,106,673,124 தொகையான மொறகஹகந்த நீர் தேக்க செயற்திட்டத்தின் சொத்துக்கள் மற்றும் அதற்குரிய பெறுமானத் தேய்வுகள் 2020 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | அதிகார சபைக்குரிய சொத்துக்களை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2015 – 2018 காலப் பகுதியில் ரூபா 80,000,000 செலவில் வெலிக்கந்த மற்றும்அ வெலிஓயா வலயங்களில் நிர்மாணிக்கப்பட்ட 30 நீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள் நிலையான சொத்தாக கணக்கீடு செய்யப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இலங்கை மஹாவலி அதிகார சபையின் ''எல் வலையம்'' மற்றும் ''பீ வலையம்'' இல் நிர்மாணிக்கப்பட்ட ரூபா 80 மில்லியன் பெறுமதியான 30 நீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள் தேசிய சமூக நீர் வளங்கள் திணைக்களத்தினால் இலங்கை மஹாவலி அதிகார சபைக்கு கையளிக்கப்பட்டுள்ளது. 2020 ஆம் ஆண்டில் நிதிக் கூற்றுக்களில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அதிகார சபைக்குரிய சொத்துக்களை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | அணை பாதுகாப்பு மற்றும் நீர் வளங்கள் திட்டமிடல் செயற்திட்டத்தினால் அதிகார சபைக்கு நிர்மாணிக்கப்பட்டு வழங்கப்பட்ட ரூபா 499,421,968 கிரயமான கொத்மலை மற்றும் பொல்கொல்ல அலுவலக கட்டிடங்கள் அதிகார சபையினால் 2019 ஆம் ஆண்டு முதல் பாவனைக்கு எடுக்கப்பட்டிருந்த போதிலும், அந்த அலுவலகங்களின் கட்டிடங்கள் அந்த அதிகார சபையின் நிலையான சொத்தாக கணக்கீடு செய்யப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பொல்கொல்ல மற்றும் கொத்மலை பணிப்பொறுப்பு பொறியியலாளர் அலுவலகங்களில் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்களின் பெறுமதி 2020 ஆம் ஆண்டில் நிதிக் கூற்றுக்களில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அதிகார சபைக்குரிய சொத்துக்களை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் போது சிறிய அளவிலான நீர் மின் உற்பத்தி கூடங்களில் கிடைக்க வேண்டிய ரூபா 22,557,702 தொகையான அரசிறை வருமானம் கணக்கீடு செய்யப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இறுதி கணக்கு தயாரிக்கும் சந்தர்ப்பத்தின் போது சிறிய அளவிலான நீர் மின் உற்பத்தி கூடங்களில் இருந்து கிடைக்க வேண்டிய வருமானமாக ரூபா 65,017,306.02 தொகையொன்று குறிப்பிடப்பட்டிருந்ததுடன், மின்சார சபையினால் கொடுப்பனவு செய்யும் போது ரூபா 81,836,484.32 தொகை கிடைக்கப் பெற்றிருந்தது. அந்த வேறுபாடு 2020 ஆம் ஆண்டின் போது நாட்குறிப்பின் மூலம் தற்போது சரி செய்யப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | வேலை பூர்த்தியடையாத வலையங்களின் மூறவெசிஹேன பிரிவு அலுவலகத்தின் நிர்மாணத்திற்காக மீளாய்வாண்டின் இறுதி வரையில் செலவிடப்பட்ட ரூபா 3,518,278 தொகை நடைமுறை வேலையாக கணக்கீடு செய்வதற்கு பதிலாக மூலதன புனருத்தாபன மற்றும் அபிவிருத்தி செலவினமாக பதிவழிக்கப்பட்டிருந்தது. | மூறவெசிஹேன பிரிவு அலுவலகம் தற்போது நிர்மாணிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. அதனால் அந்த செலவினங்கள் மூலதன பூர்த்தியடையாத வேலையாக காண்பிக்கப்பட்டுள்ளது. 2020 ஆம் ஆண்டின் போது சரிசெய்யப்படும். | நிதிக்கூற்றுக்களை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | அணை பாதுகாப்பு மற்றும் நீர் வழங்கல் திட்டமிடல் செயற்திட்டத்தின் மூலம் அதிகார சபைக்கு வழங்கப்பட்ட சொத்துக்களின் மதிப்பீட்டு பெறுமதி ரூபா 14,040,500 ஆக இருந்த போதிலும், அது ரூபா 26,533,300 ஆக கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும், ரூபா 1,800,000 தொகையான சொத்தொன்று ரூபா 18,000,000 ஆக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் ரூபா 28,692,800 இனால் அதிகரித்து நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2020 ஆம் ஆண்டில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (எ) | அணை பாதுகாப்பு மற்றும் நீர் வழங்கல் திட்டமிடல் செயற்திட்டத்தில் இருந்து அதிகார சபைக்கு கையளிக்கப்பட்ட ரூபா 671,503,748 கிரயமான நிலையான சொத்துக்களின் ஒரு பகுதி ரூபா 478,699,000 தொகையில் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், மிகுதி சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே இந்த சொத்துக்களின் பெறுமதி | செயற்திட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள சொத்துக்களில் கடன்கொடுத்தோராக காண்பிக்கப்பட்டுள்ள பெறுமதி ரூபா 398,346,892 மற்றும் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 478,699,000 ஆக இருந்ததுடன் வேறுபாடு ரூபா 80,352,108 பெறுமதி உரிய வலயங்களுக்கு அறிவிக்கப்பட்டு அதனை சரிசெய்து 2020 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இந்த செயற்திட்டத்தின் மூலம் | சொத்துக்கள் முறையான பிரகாரம் கையேற்கப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மானியமாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டிய போதிலும், கடன்கொடுத்தோரின் கீழ் ரூபா 398,346,892 ஆக ரூபா 80,352,108 தொகை குறைத்து பொறுப்புக்களில் சேர்க்கப்பட்டிருந்தமையால் மானியம் அந்த அளவினால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும், இந்த செயற்திட்டத்தின் முகாமைத்துவ வசதிகளின் கீழ் பல்வேறு ஒப்பந்தங்களில் அதிகார சபைக்கு கிடைக்கப்பெற்ற ரூபா 4,369,384 தொகையான சொத்துக்களும் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பல்வேறு ஒப்பந்தங்களில் இருந்து இலங்கை மஹாவலி அதிகார சபைக்கு வழங்கப்பட்டுள்ள ரூபா 4,369,384 தொகையான சொத்துக்கள் அதிகார சபைக்கு முறையான பிரகாரம் அணை பாதுகாப்பு மற்றும் நீர் வழங்கல் திட்டமிடல் செயற்திட்டத்தின் மூலம் கையளிக்கப்படாதிருந்ததை அறியத்தருகின்றோம். | |
| (ஏ) | அதிகார சபையின் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமானத் தேய்வு கொள்கையின் பிரகாரம் மோட்டார் வாகனங்கள் 10 சதவீத பெறுமானத் தேய்வு கழிக்கப்பட்ட பின்னர் ஆக இருந்தன் போதிலும், 06 வலயங்களினால் அவ்வாறு மேற்கொள்ளப்படாமையின் காரணமாக மீளாய்வாண்டின் பெறுமானத் தேய்வு செலவினம் ரூபா 6,116,990 தொகை அதிகரித்து நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | 06 வலயங்களின் மோட்டார் வாகனங்கள் மீள்மதிப்பீடு செய்து அந்த பெறுமதியில் பெறுமானத் தேய்வு கழிக்கப்படாத பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டமையினால் அந்த தவறை திருத்தி 2020 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களின் மூலம் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்களை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.4 இணக்கஞ்செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கை

| | விடயம் | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி | நேரொத்த அறிக்கையின் பிரகாரம் பெறுமதி | வேறுபாடு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | | |
| (அ) | மஹாவலி கால்நடை வள கம்பனியின் முதலீட்டுப் பெறுமதி | 413,981,000 | 416,132,219 | 2,151,219 | 2019.12.31 இல் மஹாவலி கால்நடை வள கம்பனியின் ஒன்றிணைந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் வேறுபாடு ரூபா 2,151,219 ஆக இருந்தது. அந்த வேறுபாட்டிற்கு காரணமான | வேறுபாடுகளை பரீட்சித்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | விடயங்களை இனங்கண்டு 2020 ஆம் ஆண்டில் சரி செய்யப்பட்டுள்ளது. | |
| (ஆ) | பணிக்கொடை ஒதுக்கீடுகள் - மஹாவலி பாதுகாப்பு படையணி. | 266,401,977 | 266,561,977 | 160,000 | மஹாவலி பாதுகாப்பு படையணியின் நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஒன்றிணைந்த நிதிக் கூற்றுக்களில் பணிக்கொடை ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அவ்வாறான வேறுபாடுகள் காணப்படவில்லை. | வேறுபாடுகளை பரீட்சித்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | மீண்டெழும் செலவினம் - மஹாவலி பாதுகாப்பு படையணி. | 488,250,509 | 471,290,659 | 16,959,850 | மஹாவலி பாதுகாப்பு படையணியின் நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஒன்றிணைந்த நிதிக் கூற்றுக்களில் மீண்டெழும் செலவினங்களுக்கிடையே அவ்வாறான வேறுபாடு காணப்படவில்லை. | வேறுபாடுகளை பரீட்சித்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | மூலதன செலவினம் - மஹாவலி நிலையம் | 6,662,000 | 5,908,943 | 753,057 | மஹாவலி ஒன்றிணைந்த செயற்திட்டத்திற்குரிய "விவசாய" கணக்கு குறியீட்டின் கீழ் ரூபா 753,510 தொகை தவறினால் மஹாவலி நிலையத்தின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | வேறுபாடுகளை பரீட்சித்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | பெறவேண்டிய கணக்குகள் ஆரம்ப வேலைக் கட்டுப்பாட்டு செயற்பாடுகள் மற்றும் பராமரிப்பு பிரிவு. | 1,016,163,953 | 1,014,922,181 | 1,241,772 | ஒன்றிணைந்த நிதிக் கூற்றில் பெறவேண்டிய கணக்குகளின் கீழ் இனங்காண முடியாத மீதியான ரூபா 1,240,772 தொகை காண்பிக்கப்பட்டதுடன், ஆரம்ப வேலை கட்டுப்பாட்டு செயற்பாடுகள் மற்றும் பராமரிப்பு பிரிவின் நிதிக் கூற்றில் அந்த தொகை நடைமுறைச் சொத்துக்களின் கீழ் வேறாக காண்பிக்கப்பட்டுள்ளது. | வேறுபாடுகளை பரீட்சித்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | மோட்டார் வாகனங்களின் பெறுமானத் தேய்வு - ஹுறுலுவெவ | 5,475,240 | 5,817,240 | 342,000 | ஹுறுலுவெவ வலயத்தின் மூலம் தவறொன்றினால் கங்கா துரோணி முகாமைத்துவ பிரிவிற்கு அனுப்பப்பட்ட திரண்ட பெறுமானத் தேய்வான ரூபா 342,000 தொகை ஆண்டின் பெறுமானத் | வேறுபாடுகளை பரீட்சித்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | தேய்வாக காண்பிக்கப்பட்டுள்ளது. அதனை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (எ) | விவசாயப் பண்ணை இலாபம்/ நட்டம் எல் வலயம் | 2,197,000 | 1,789,000 | 408,000 | எல் வலயத்தின் நிதி செயலாற்றல் அறிக்கையில் சரியாக ரூபா 2,197,121 தொகை காண்பிக்கப்பட்டுள்ளது. எனினும், விவசாய பண்ணை இலாப நட்ட கணக்கு தயாரிக்கும் போது நேரடியாக சொத்துக்களின் வேறுபாடு சீராக்கப்பட்டிருக்கவில்லை. அது சரி செய்யப்பட்டுள்ளது. | வேறுபாடுகளை பரீட்சித்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.5.5 தொங்கல் கணக்குகள்**

| விடயம் | தொகை | தொங்கலாகக் காணப்பட்ட காலப் பகுதி | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| மஹாவலி கால்நடை வள மற்றும் விவசாய முயற்சிகள் (தனியார்) கம்பனி | 13,010,825 | 05 வருடங்கள் | ரூபா 33 மில்லியன் அளவிலான மீதியில் தற்போது வரையில் ரூபா 13 மில்லியன் வரை சரிசெய்து கொள்வதற்கு முடியுமாக இருந்தது. இந்த ஆண்டின் போது ரூபா 1 மில்லியன் அளவான மீதியை சரிஷெய்வதற்கு முடியுமாக இருந்தது. எதிர்காலத்தில் இந்த மீதியை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளதுடன் 2020 ஆம் ஆண்டின் ஒன்றிணைந்த நிதிக் கூற்றுக்களில் தனித் தனியாக காண்பிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | இனங்காணப்படாத கணக்குகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.6 ஒன்றிணைத்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| ஒன்றிணைந்த நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட மஹாவலி ஆலோசனைச் சேவை பணியகம் (தனியார்) கம்பனி 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 150(அ) பிரிவின் பிரகாரம் கணக்காய்விற்கு நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்திருக்கவில்லை. இதனால் அதிகார சபையின் நிதிக் கூற்றுக்கள் அந்த கம்பனியின் நிதிக் கூற்றுக்களுடன் ஒன்றிணைக்கும் போது கணக்காய்வு செய்யப்படாத நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு ஒன்றிணைந்த நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தது. | கம்பனிக்காக இது வரையில் பணிப்பாளர் சபையொன்று நியமிக்கப்படாதிருந்ததுடன் வரிசை அமைச்சின் செயலாளரினால் கம்பனிகளின் நடவடிக்கைகளை நடாத்திச் செல்வதற்காக ‘‘உரிய அதிகாரி’’ நியமிக்கப்பட்டுள்ளார். எனினும் இந்த கம்பனிகள் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 150(அ) பிரிவின் பிராகரம் 2020 யூன் மாதம் 24 ஆம் திகதி கணக்காய்விற்கு நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்ட போதிலும், அந்த நிதிக் கூற்றுக்கள் ‘‘உரிய அதிகாரியின்’’ அங்கீகாரத்தில் கையேற்றல் நிராகரிக்கப்பட்டிருந்தது. மேலும் நிதிக் கூற்றுக்கள் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் மாத்திரமே கணக்காய்வு செய்ய முடியும் என 2020 யூலை 17 ஆம் திகதி எங்களுக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் எங்கள் கம்பனியின் பணிப்பாளர் இது வரையிலும் வெற்றிடமாக காணப்பட்டார். | ஒன்றிணைந்த நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது துணைக் கம்பனிகளின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்கள் பயன்படுத்தப்பட வேண்டும். |

### 1.5.7 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| | விடயம் | தொகை | வழங்கப்படாத கணக்காய்வுச் சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- | --- | --- |
| | | ரூபா | | | |
| (அ) | முதலீடு | 20,477,000 | பங்குச் சான்றிதழ் | இது தொடர்பாக கண்டறிந்து எதிர்காலத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய மீதி உறுதிப்படுத்தல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஆ) | சேமிப்புக் கணக்கு | 2,632,908 | மீதி உறுதிப்படுத்துதல் மற்றும் பாஸ் புத்தகம் | -மேற்படி- | -மேற்படி- |
| (இ) | நிலையான வைப்பு | 727,481 | வைப்புச் சான்றிதழ் மீதி உறுதிப்படுத்தல். | -மேற்படி- | -மேற்படி- |

### 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

#### 1.6.1 பெறவேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஜாவத்தை வளவில் அமைந்துள்ள வெளித்தரப்பினரினால் பயன்படுத்தப்படுகின்ற 13 கட்டிடங்களுக்காக மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் அறவிட வேண்டிய வாடகையை அறவிடுமாறு அறிவிக்கப்பட்ட போதிலும், ரூபா 70,224,000 தொகை 2019 திசெம்பர் 31 வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. அதிகாரசபையினால் அந்த கட்டிடத்திற்கான மின்சாரம் மற்றும் நீர் பட்டியலாக செலுத்தப்பட்ட ரூபா 27,027,871 தொகை உரிய தரப்பினரிடம் இருந்து மீளளிப்பு செய்யப்பட்டிருக்கவில்லை. | நிறுவனத்திற்கு மீளளிப்பு செய்வதற்கு அவ்வப் போது அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த மீளளிப்பு செய்யப்படாமை தொடர்பாக பணிப்பாளர் சபைக்கு மிகுதி நடவடிக்கைகளுக்காக ஆலோசனைகளை பெற்றுக்கொள்வதற்கு பணிப்பாளர் சபை பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்த பெறுமதியில் ரூபா 3,472,883 தொகை 2020 ஆம் ஆண்டின் போது கிடைத்துள்ளது. | பெறவேண்டிய பணத்தை அறவிடுதவற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2019 மார்ச் 24 ஆம் திகதிய 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் சுற்றறிக்கையின் 2.3.3 ஆம் பந்தி. | உத்தியோகத்தர் ஒருவர் செயற்திட்டத்திற்கு விடுவிக்கக் கூடியதாக இருப்பது அரசாங்கத்தின் தேவையின் அடிப்படையில் முழு நேர அடிப்படையில் 05 வருடங்கள் அல்லது சம்பளமற்ற அடிப்படையில் ஊழியரின் கோரிக்கையின் பிரகாரம் 05 வருடங்களுக்காக | மொறகஹகந்த, களுகங்கை செயற்திட்டத்தின் ஆரம்ப காலத்தின் போது அதிகாரசபை உத்தியோகத்தர்களை விடுவிக்கும் போது அது அதிகாரசபையின் கீழ் அமுல்படுத்தப்படுகின்ற அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டமாக கருதி உத்தியோகத்தர்கள் | செயற்திட்டத்திற்காக ஊழியர்களை விடுவிக்கும் போது சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

மாத்திரமாகும். எனினும் அதிகார சபையின் 37 உத்தியோகத்தர்களுக்கு 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக செயற்திட்டங்களில் சேவையாற்றியிருந்தனர். இதன் காரணமாக அதிகாரசபையின் நிரந்தர பதவி நீண்ட காலமாக வெற்றிடமாக காணப்பட்டது. மேலும் 33 பேர்கள் மொறகஹகந்த, களுகங்கை செயற்திட்டத்தின் சேவைக்காக இடமாற்றத்தின் கீழ் முழு நேர சம்பளத்துடன் நியமிக்கப்பட்டிருந்தனர்.

நியமிக்கப்பட்டிருந்தனர். எனினும், பின்னைய காலங்களில் மேற்கூறப்பட்ட செயற்திட்டங்களுக்கு உத்தியோகத்தர்களை நியமிக்கும் போது முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை 01/2019 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் உரிய உத்தியோகத்தர்கள் / ஊழியர்களை விடுவித்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மொறகஹகந்தை, களுகங்கை அபிவிருத்தி செயற்திட்டத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகள் பூர்த்தி அடையும் தன்மையின் பிரகாரம் சேவை தேவையினை விஞ்சி காணப்படுகின்ற மிகையான பதவியணியினரை மீண்டும் அதிகார சபைக்கு நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அவ்வாறே 05 வருடங்களை விஞ்சியுள்ள ஏனைய செயற்திட்ட பதவியணியினர்கள் தற்போது மீண்டும் அதிகார சபையின் சேவையில் ஈடுபட கோருவதற்கு மேற்கொள்ளப்படும். அதன் பிரகாரம் ஒன்றிணைந்த தீர்த்து வைக்கும் மற்றும் நீர் வழங்கல் முகாமைத்துவம் புதிய செயற்திட்டத்தின் ஆரம்ப நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ள பதவியணியினரை மீண்டும் அதிகார சபையின் கொண்டு வரப்பட்டுள்ளது. அவ்வாறே காலநிலை தாக்கங்களை குறைக்கும் செயற்திட்டத்தின் சேவையில் ஈடுபடுகின்ற

| | | | | |
|---|---|---|---|---|
| | | | 05 வருடங்களை விஞ்சிய பதவியணியினரும் தற்போது மீண்டும் கோருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | |
| (ஆ) | அதிகாரசபையின் நிதி செயற்பாட்டு நடைமுறைக் கோவையின் 1.5.1 ஆம் பந்தி மற்றும் பணிப்பாளர் நாயகத்தின் 2012 மார்ச் 15 ஆம் திகதிய 02/2012 ஆம் இலக்க உள்ளக சுற்றறிக்கையின் 05 ஆம் பிரிவு. | முற்பண தொகை பெற்ற பதவியணியினரின் பணிகள் முடிவடைந்து 07 நாட்களுக்குள் தீர்க்கப்பட வேண்டிய போதிலும் 10 வலயங்கள் மற்றும் இரண்டு பிரிவுகளில் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட தீர்க்கப்படாத ரூபா 167,329,000 தொகையான வழங்கல் முற்பணமாக இருந்தது. | இந்த மீதி தொடர்பாக வலயத்தில் இருந்தும் / பிரிவிலிருந்தும் பட்டோலைகள் பெறப்பட்டு கணக்கீட்டு குறைபாடுகள் காணப்படுமாயின் அதன் பிரகாரம் சரிசெய்வதற்கும், கிடைக்க வேண்டிய மீதி தொடர்பாக உரிய நிறுவனம் மற்றும் நபர்களுக்கு கடிதம் மூலம் அறிவிப்பதற்கும், ஏதாவது கணக்கீட்டு வழுக்களில் வேறுபாடுகள் காணப்படுமாயின் அதனை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அதிகாரசபையின் நிதி நடைமுறை கோவையின் பிரகாரம் மற்றும் உள்ளக சுற்றறிக்யையின் பிரகாரம் முற்பணங்களை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சின் 2017 திசெம்பர் 21 ஆம் திகதிய 2/2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை ------------------------------ | | | |
| (i) | 2 ஆம் பிரிவு. | அரசாங்கத்தின் சகல நிறுவனங்களினாலும் பயன்படுத்தப்படுகின்ற அரசாங்கத்திற்குரிய சகல வாகனங்களும் அந்த நிறுவனத்தின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருத்தல் கட்டாயமாக இருந்த போதிலும், அதிகார சபையினால் பயன்படுத்தப்படுகின்ற அரசாங்கத்திற்கு சொந்தமான 56 வாகனங்கள் அதிகாரசபையின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | மஹாவலி வலயத்தில் செயற்பட்ட வெளிநாட்டு நிறுவனங்களின் செயற்திட்டத்திற்காக கொண்டு வரப்பட்ட சுங்கவரி விடுவிக்கப்பட்ட வானங்கள் அந்த செயற்திட்டம் முடிவடைந்ததன் பின்னர் அதிகாரசபைக்கு கையளிக்கப்பட்டுள்ளது. அமைச்சுக்குச் சொந்தமான அந்த வாகனங்ளை கையேற்பதற்கு நடவடிக்கை | சுற்றறிக்கையின் பிரகாரம் அதிகார சபையின் சகல வாகனங்களும் அதிகார சபையின் பெயரில் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | எடுக்கப்படுகின்றது. இந்த சுங்கவரி விடுவிக்கப்பட்ட வாகனங்களை எங்களுக்கு கையேற்கும் போது இலங்கை சுங்கத்திற்கு சுங்கவரி செலுத்த வேண்டியுள்ளது. வரி செலுத்தி இந்த வாகனங்களை கையேற்றல் பொருளாதார ரீதியில் இலாபகரமானதாக இருக்கவில்லை. அந்த வாகனங்களை கையேற்கும் போது செலுத்த வேண்டிய சுங்கவரி சுங்கத் திணைக்களத்துடன் கலந்துரையாடப்பட்டு வரியினை நீக்குவதற்கும் அதிகாரசபையின் பெயரில் பதிவு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ii) | 2.3 (அ) மற்றும் (ஆ) பிரிவுகள் | அரசாங்கத்தின் நிறுவனங்களுக்கு நன்கொடையாக கிடைத்துள்ள வாகனங்கள் மற்றும் அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக வரியின்றி இறக்குமதி செய்யப்பட்டுள்ள வாகனங்களை பயன்படுத்தும் போது பதிவு செய்தலின் உரித்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு வரியின்றி இறக்குமதி செய்யப்பட்ட 16 வாகனங்களை பதிவுசெய்யும் உரித்து தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | அந்த வாகனங்கள் அதிகார சபைக்கு கையேற்கும் போது கணிசமான வரி தொகை செலுத்துவதற்கு ஏற்படுகின்றமையினால் இது தொடர்பாக இலங்கை சுங்கத் திணைக்களம் மற்றும் மோட்டார் வாகனங்களை பதிவு செய்யும் திணைக்களத்துடன், தொடர்பினை ஏற்படுத்தி மிகுதி நடவடிக்கைகளை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் வாகனங்களை பதிவு செய்யும் உரித்தை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | நிதி மற்றும் ஊடகத் துறை அமைச்சின் 2018 மார்ச் 19 ஆம் திகதிய 1/2018 ஆம் இலக்க | ஓட்டத்தில் ஈடுபடுத்த முடியாத நிலையில் காணப்படுகின்ற சகல வாகனங்களும் 2018 யூன் 30 இற்கு முன்னர் விற்றுத் தீர்க்கப்பட வேண்டியிருந்த | அதிகாரசபைக்குரிய ஓட்டத்தில் ஈடுபட முடியாத நிலையில் காணப்படுகின்ற சகல வாகனங்களும் 2018 ஆம் ஆண்டு வரையில் | சுற்றறிக்கையின் பிரகாரம் விரைவாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் 2(ஆ) பிரிவு. | போதிலும், அதிகார சபையினால் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | விற்றுத் தீர்ப்பதற்கு முடியாதிருந்தது. அதிகார சபைக்குரிய சகல வலயங்கள் / பிரிவுகளுக்குரிய ஓட்டத்தில் ஈடுபட முடியாத நிலையில் காணப்படும் வாகனங்களை தற்போது விற்றுத் தீர்ப்பதற்காக மதிப்பீடு செய்வதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் இந்த ஆண்டின் இறுதி அளவில் இந்த வாகனங்களை விற்றுத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இறுதிக் கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (உ) | 1947 இன் 08 ஆம் இலக்க அரசாங்கத்தின் காணிக் கட்டளைச் சட்டத்தின் 217(2)(vi) ஆம் பிரிவு. | வணிக அல்லது தொழில்நுட்ப நடவடிக்கைகளுக்காக காணி குத்தகைக்கு வழங்கும் போது சந்தைப் பெறுமதி மதிப்பிடப்பட்டு வாடகைப் பணம் அறவிட வேணடிய போதிலும், தமுத்தேகம வதிவிட வியாபார முகாமைத்துவ அதிகாரப் பிரதேசத்தின் 18 காணிக் கூறுகளை கருங்கல் உடைப்பதற்காக குத்தகை அடிப்படையில் விடுவிடுக்கப்பட்டிருந்த போதிலும், 2020 பெப்ரவரி 27 ஆம் திகதி கணக்காய்வு திகதி வரையிலும் அதில் எந்தவொரு காணியும் அளவிடப்பட்டு அவற்றின் அரசாங்கத்தின் மதிப்பீட்டு பெறுமதி அடிப்படையில் குத்தகைப் பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை . | மஹாவலி எச் வலயத்தில் அமுல்படுத்தப்பட்ட கருங்கல் அகழ்வு செயற்திட்டத்தின் நிலம் பல வருட காலங்களுக்கு முன்னிருந்து அதிகார சபையின் முறையான அங்கீகாரத்துடன் வாடகை அடிப்படையின் கீழும், முறையான அங்கீகாரம் இன்றியும் செயற்திட்டதாரர்களுக்கு செயற்திட்டத்தை மேற்கொள்ளவதற்காக விடுவிக்கப்பட்டிருந்தது. அதனால் அந்த செயற்திட்ட காணிக்குரிய செயற்திட்டதாரர்களின் தனியார் செலவில் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்குமாறு செயற்திட்டதாரர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. உரிய உப கூறிடல்கள் கிடைத்ததன் பின்னர் உரிய செயற்திட்ட காணிக்காக அரசாங்கத்தின் மதிப்பீட்டை பெற்றுக் கொள்வதற்காக அநுராதபுர மதிப்பீட்டு | 1947 இன் 08 ஆம் இலக்க அரசாங்க காணிகள் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து உரிய வாடகையை குறித்த பிரகாரம் அறவிடல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. மதிப்பீட்டு திணைக்களத்திலிருந்து உரிய தகவல்கள் இது வரையிலும் கிடைக்கப் பெறாதிருந்ததுடன், உரிய மதிப்பீட்டு பெறுமதி கிடைத்ததன் பின்னர் செயற்திட்டங்களுக்குரிய வாடகைப் பணத்தை கணக்கிட்டு நிலுவை வாடகைப் பணத்தை அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஊ) | 2019 மார்ச் 21 ஆம் திகதிய LUP/01/01/2019 ஆம் இலக்க மஹாவலி அதிகார சபையின் உள்ளக சுற்றறிக்கை.<br>----------------------------- | | | |
| (i) | பட்டோலை (i) 1.6 ஆம் பிரிவு. | புவிச்சரிதவியல், அளவை மற்றும் சுரங்கங்கள் பணியகத்திற்கு அரசாங்க அரசிறை செலுத்தி அகழ்வு அளவின் அடிப்படையில் காணி பயன்பாட்டு கட்டணம் அறவிட வேண்டியிருந்த போதிலும், தமுத்தேகம தொழில் முயற்சி முகாமைத்துவ அலுவலகத்தினால் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. புவிச்சரிதவியல், அளவை மற்றும் சுரங்கங்கள் பணியகத்திற்கு அரசிறை செலுத்தும் அளவு உறுதிப்படுத்தப்படாமல் அனுமதிப் பத்திரதாரரினால் கோரப்பட்ட கியூப் அளவிற்காக மாத்திரம் காணி பயன்பாட்டு கட்டணம் அறவிடப்பட்டிருந்தது. | அந்த வலயத்தில் அமுல்படுத்தப்பட்ட அகழ்வு செயற்திட்டங்களுக்குரிய அகழ்வின் அளவு தொடர்பான தகவல்களை பெற்று புவிச்சரிதவியல், அளவை மற்றும் சுரங்கங்கள் பணியகத்தின் கடிதத்தின் மூலம் கோரப்பட்டுள்ளதுடன், அந்த தகவல்கள் கிடைத்ததன் பின்னர் அந்த நிலுவை கணிப்பிடப்பட்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் அகழ்வின் அளவு சரியாக இனங்காண்பதற்கும் உரிய பிரகாரம் காணியை பயன்படுத்தும் கட்டணம் அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | பட்டோலை (i) இன் 1.8 ஆம் பிரிவு | அகழ்வுகள் மேற்கொள்ளப்படுகின்ற நிலையங்கள் தொடர்ச்சியாக மேற்பார்வை செய்வதற்காக பிரிவு ரீதியில் அவதானிப்பு குழு நியமித்தல், இரண்டு வாரங்களுக்கு ஒரு தடவை களப் பரிசோதனை அவதானிக்கப்பட்டு நாளொன்றுக்கு விடுவிக்கப்படுகின்ற கனிய பொருட்களின் அளவு உள்ளடக்கி அறிக்கை பணிப்பாளருக்கு (காணி பயன்பாடு திட்டமிடல்) அனுப்ப வேண்டிய போதிலும், தமுத்தேகம வதிவிட வியாபார முகாமைத்துவ அலுவலகத்தினால் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளக சுற்றறிக்கை இலக்கம் LUP/01//01/2019-(i)-1.8 ஆம் பிரிவின் பிரகாரம் செயற்திட்ட நிலம் தொடர்பான பிரிவு ரீதியில் அவதானிப்பு அறிக்கையை எனக்கு வழங்குமாறு உரிய பிரிவு முகாமையாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அகழ்வு நடவடிக்கைகள் தொடர்பாக விஞ்ஞான ரீதியான மற்றும் நிபுனத்துவ அறிவு புவிச்சரிதவியல், அளவை மற்றும் சுரங்கங்கள் பணியகத்திற்கு உரியதாக இருந்தது. எச் வலயத்தில் அமுல்படுத்தப்பட்ட அகழ்வு செயற்திட்டங்களுக்குரிய அகழ்வு அளவு தொடர்பான தகவல்கள் புவிச்சரிதவியல், அளவை மற்றும் சுரங்கங்கள் பணியகத்திடம் இருந்து கோரப்பட்டுள்ளது. தகவல் கிடைத்ததன் பின்னர் பெறப்பட்ட கனிய பொருட்களின் அளவு பணிப்பாளர் (காணி பயன்பாடு மற்றும் திட்டமிடல்) இற்கு அனுப்புமாறு வதிவிட வியாபார முகாமைத்துவ வலயம் எனக்கு அறிக்கையிட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் சரியான மேற்பார்வையை மேற்கொண்டு உரிய அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (எ) | நிதி, பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சின் 2020 சனவரி 03 ஆம் திகதிய சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் 012017(1) ஆம் இலக்கம். | அரசாங்க நிறுவனங்களினால் பயன்படுத்தப்படுகின்ற கட்டிடங்கள் தொடர்பான தகவல்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நாளது வரையாக்கி 2020 சனவரி 20 ஆம் திகதிக்கு முன்னர் கட்டுப்பாட்டாளர் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், இலங்கை மஹாவலி அதிகார சபையின் எச் | இலங்கை மஹாவலி அதிகார சபைக்கு சொந்தமான மஹாவலி ஈ வலயம் மற்றும் பிரதான வயல் மற்றும் நீர்த்தோக்க செயற்பாட்டு பிரிவிற்குரிய தகவல்கள் கட்டுப்பாட்டாளர் அலுவலகத்திற்கு தற்போது அனுப்பப்பட்டுள்ளது. ஏனைய 02 வலயங்களான எச் வலயம் மற்றும் எல் | சுற்றறிக்கையின் பிரகாரம் உரிய தகவலை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வலயம், ஈ வலயம் ஆரம்ப வேலை கட்டுப்பாட்டு செயற்பாடுகள் மற்றும் பராமரிப்பு பிரிவு மற்றும் எல் வலயத்தினால் கட்டிடங்கள் தொடர்பான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | வலயத்திலிருந்து இந்த தகவலை விரைவாக பெற்று கட்டுப்பாட்டாளர் நாயக அலுவலகத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஏ) | கட்டுப்பாட்டாளர் நாயக அலுவலகத்தின் 2018 திசெம்பர் 31 ஆம் திகதி விநியோகிக்கப்பட்ட நிதி அல்லாத சொத்துக்களின் மதிப்பீட்டு வழிகாட்டியின் 2.1 ஆம் பந்தி. | அரசாங்கத்திற்குரிய சகல காணிகளும் மதிப்பீடு செய்தல் தேவையாக இருந்ததுடன், அதன் பிரகாரம் அதன் போது அரசாங்கத்தின் அலுவலகம், ஓய்வு விடுதிகள், வேலைத் தளங்கள் போன்றவை ஸ்தாபிக்கப்பட்டுள்ள காணிகளை மதிப்பீடு செய்து கொள்வதற்கு முன்னுரிமை வழங்க வேண்டிய போதிலும், இலங்கை மஹாவலி அதிகார சபையின் அலுவலகம், ஓய்வு விடுதிகள் மற்றும் வேலைத்தளங்கள் போன்றவை அமைந்துள்ள காணிகளை மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் மதிப்பீடு செய்து நிதி அறிக்கைகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வழிகாட்டியின் பிரகாரம் உரிய காணிகளை மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஐ) | 2017 மே 09 ஆம் திகதிய டீஜீ/05/2017 ஆம் இலக்க மஹாவலி அதிகார சபையின் உள்ளக சுற்றறிக்கை ------------------------------- | | | |
| (i) | ஏ – 3 மற்றும் சீ – 1 ஆம் பிரிவுகள். | தலாவ பிரிவு அலுவலகத்தினால் உத்தியோகபூர்வ விடுதிகள் மற்றும் கட்டிடங்கள் தொகுதிகளாக்கப்பட்டு நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. பராமரித்து நடாத்திச் செல்லுதல் பொருளாதார ரீதியில் பயனற்றதாக வீடு | பிரிவு அலுவலகத்தின் உத்தியோகபூர்வ இல்லங்கள் மற்றும் ஏனைய கட்டிடங்களுக்காக தனித்தனியான கோவைகள் பேணிச் செல்லப்படுகின்றது. காணப்படுகின்ற நிதி ஏற்பாட்டு வரையரையினால் பல வருடங்கள் முதல் | சுற்றறிக்கையின் பிரகாரம் தொகுதிகளின் பிரகாரம் நிலையான சொத்துப் பதிவேட்டை பராமரிக்கும் நடவடிக்கைகளை செய்ய வேண்டியிருந்ததுடன், உத்தியோகபூர்வ இல்லங்களை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அல்லது கட்டிடங்கள் உரிய பிரகாரம் இனங்கண்டு அது தொடர்பாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. புற்கள் வளர்ந்து கைவிடப்பட்டுள்ள 04 வீடுகளை காணக்கூடியதாக இருந்தது. | உத்தியோகபூர்வ இல்லங்களை பழுதுபார்ப்பதற்காக போதியளவான நிதி ஏற்பாட்டை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தமையின் காரணமாக பழுதுபார்த்தல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது. அதனால் உடைந்த நிலைக்கு உள்ளாகியுள்ளதை நாங்கள் ஏற்றுக் கொள்கின்றோம். திறைசேரியிலிருந்து அதிகார சபைக்கு போதியளவான நிதி ஏற்பாடு வழங்கப்படுமாயின் இந்த உத்தியோகபூர்வ இல்லங்களை பழுதுபார்த்து பயன்படுத்துவதற்கு முடியுமாக இருக்கும் என அறியத்தருகின்றோம். | ஆக்கபூர்வமானதாக பயன்படுத்துதல் வேண்டும். |
| (ii) | பீ - 1 ஆம் பிரிவு | வெளித்தரப்பினருக்கு உத்தியோகபூர்வ வீடுகளை வழங்கும் போது வாடகை அல்லது குத்தகை அடிப்படையில் முறையான உடன்படிக்கை செய்யவேண்டியிருந்த போதிலும், தலாவ முகாமில் 06 உத்தியோகபூர்வ இல்லங்கள் வெளித்தரப்பினருக்கு உடன்படிக்கை செய்யப்படாமல் கட்டணங்கள் இன்றி வழங்கப்பட்டிருந்தது. கணக்காய்வு பரிசோதனை சந்தர்ப்பத்தின் போது அதில் ஒரு உத்தியோகபூர்வ இல்லம் மஹாவலி அதிகார சபையின் அனுமதியின்றி பழுதுபார்க்கப்பட்டுக் கொண்டிருந்தது. | 05 உத்தியோகபூர்வ இல்லங்கள் தபால் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்தமை சொத்துப் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டிருந்தது. முறையான அங்கீகாரம் இன்றி தபால் திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட பழுதுபார்த்த நிலையில் காணப்பட்ட உத்தியோகபூர்வ இல்லங்கள் தொடர்பாக தலாவ பொலிஸுக்கு முறைப்பாடு செய்யப்பட்டிருந்ததுடன், அந்த பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் தற்போது நிறுத்தப்பட்டுள்ளது. ஏனைய உத்தியோகபூர்வ இல்லங்கள் அதிகார சபைக்கு சொந்தமாக இருந்ததுடன், அது பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி (தலாவ) | சுற்றறிக்கையின் பிரகாரம் உடன்படிக்கை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

இனால் பயன்படுத்தப்பட்ட போதிலும், இற்கான பணம் எதுவும் அறவிடப்படாதிருந்தமையை குறிப்பிடுகின்றோம். மேலும் வெளித்தரப்பினருக்கு வீடுகளை வழங்கும் போது முறையான உடன்படிக்கையின்றி கட்டணங்களுக்காக முறையான உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்காக உரிய உடன்படிக்கை தயாரிக்கப்படுகின்றது.

## 1.8 நிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மஹாவலி மக்களுக்கு கடன் வழங்குவதற்காக சுழற்சி நிதியம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு 2002 ஆம் ஆண்டின் போது ரூபா 48 மில்லியன் தொகையும், 2009 ஆம் ஆண்டின் போது ரூபா 50 மில்லயன் தொகையும் பிரதேச அபிவிருத்தி வங்கியில் வைப்புச் செய்யப்பட்டிருந்த போதிலும், 2020 ஆம் ஆண்டு வரையும் கடன் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் இறுதியில் வைப்பு பெறுமதி ரூபா 160.4 மில்லயினாக இருந்ததுடன் சராசரியான சேமிப்பு வட்டியினை விட குறைவான 4 சதவீத வட்டியின் கீழ் இந்த நிதியம் நீண்ட காலமாக வங்கியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தமை பொருளாதார ரீதியிலான செயற்பாடாக இல்லாதிருந்தது. | இந்த நிதியத்தை பீ மற்றும் சீ வலயங்களின் மக்களுக்கு மற்றும் ஒதுக்கப்பட்ட நிதியத்தினால் அந்த வலயங்களின் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கான சலுகை வட்டி விகிதத்தின் கீழ் கடன் நிகழ்ச்சித் திட்டமொன்று அமுல்படுத்துவதற்கு 2020.09.01 ஆம் திகதிய பணிப்பாளர் சபை கூட்டத்தின் போது அங்கீகாரம் கிடைத்திருந்தது. அதன் பிரகாரம் பீ மற்றும் சீ வலயங்களின் தொழில் முயற்சியாளர்களை கட்டியெழுப்புவதற்காக அந்த நிதியத்தை பயன்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | நிதியினை செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் பயன்படுத்துதல் வேண்டும். |

**1.9 வரி பிரமாணங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி (திருத்த) சட்டத்தின் 10(ஆ) பிரிவு | 12 மாத காலத்தில் பொருட்கள் மற்றும் சேவை வழங்கல்களின் மொத்த பெறுமதி 12 மில்லியனை விஞ்சுமாயின் சட்டத்தின் கீழ் பெறுமதி சேர் வரி பதிவு செய்ய வேண்டியிருந்த போதிலும் அதிகார சபையினால் உரிய வருமான மூலங்களில் முன்னைய ஆண்டின் போது 152 மில்லியன் மற்றும் மீளாய்வாண்டில் ரூபா 1,920 மில்லியன் வருமானம் ஒன்று சேகரிக்கப்பட்ட போதிலும், பெறுமதி சேர் வரிக்காக பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுமதிசேர் வரிக்காக பதிவு செய்வதற்கு ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | பெறுமதிசேர் வரிக்காக பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிகள் சட்டத்தின் 6 மற்றும் 7 ஆம் பிரிவுகள். | அதிகார சபையினால் வருமான வரி செலுத்த வேண்டியிருந்த போதிலும், வருமான வரி செலுத்தாதிருந்ததுடன், வருமான வரியிலிருந்து விடுவிக்கப்பட்டமையை உறுதிப்படுத்துவதற்கு தேவையான ஆவணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், சிறிய அளவிலான நீர் மின் உற்பத்தி கூடங்களில் உழைக்கப்படுகின்ற அரசிறைகள் வருமானத்திற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 36,823,372 தொகை நிறுத்தி வைத்தல் வரியொன்று செலுத்தப்பட்ட போதிலும், அதற்கான வரி குறைத்தல் சான்றிதழ் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக எதிர்காலத்தில் | சிறிய அளவிலான நீர் மின்சார உற்பத்தி கூடங்களுக்குரிய அரசிறை வருமானம் தொடர்பாக நிறுத்தி வைத்தல் வரிச் சான்றிதழ் (with holding tax) இலங்கை மின்சார சபை மூலம் அறவிடப்பட்டுள்ளது. | 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிகள் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

வருமான வரியின் கீழாக இருந்த போதிலும் வரி சலுகையை பெற்றுக் கொள்வதற்கு முடியாதிருந்த நிலைமை காணப்பட்டது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 293,175,000 நட்டமாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா 423,600,000 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 130,425,000 அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு அரசிறை வருமானம் அதிகரித்தமை மற்றும் புனருத்தாபன மற்றும் அபிவிருத்தி செய்யும் செலவினம் குறைவடைந்தமை பிரதான காரணங்களாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அதிகார சபையின் விவசாய பண்ணைகளில் காணப்படுகின்ற அபிவிருத்தி செய்யப்படாத வெற்று நிலங்கள் தனியார் பிரிவின் பங்களிப்புடன் அபிவிருத்தி செய்யும் நோக்கில் நீண்டகால குத்தகை அடிப்படையில் ஏலமிடுவதற்கு இலங்கை மஹாவலி அதிகார சபை பணிப்பாளர் சபை அங்கீகாரம் 2019 யூன் 18 ஆம் திகதி வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அந்த பண்ணைக்கு சொந்தமான அபிவிருத்தி செய்ய முடியாத வெற்று நிலங்கள் எதிர்வரும் பெரும் போகத்தின் போது பயிர் செய்யக்கூடிய வகையில் ஏலமிடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு உரிய வதிவிட தொழில் முயற்சி முகாமையாளர்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. நீராவிய, நொச்சியாகம மற்றும் களங்குட்டிய விவசாய பண்ணைகளுக்கு சொந்தமான கூட்டுமொத்தமாக 53.4 ஹெட்டேயர் அளவான வெற்று நிலங்கள் 2020 பெப்ரவரி வரையிலும் ஏலமிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நொச்சியாகம பண்ணையின் காணியின் 43 ஏக்கர் பகுதியொன்று பணிப்பாளர் சபையின் முறையான அங்கீகாரத்தின் பிரகாரம் உரித்து கையளிக்கப்பட்டுள்ளது. விடுவிக்கப்பட்ட காணிப் பகுதியை அளவிடுவதற்கு சிரேஷ்ட நில அளவையாளர் அதிகாரி அனுராதபுரற்கு அனுப்பப்பட்டுள்ளது. களங்குட்டிய விவசாய பண்ணையின் காணியில் 25 ஏக்கர் நில அளவொன்று கையளிப்பதற்கு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நீராவிய விவசாய பண்ணையின் நிலத்தில் அபிவிருத்தி செய்யப்படாத நிலப் பகுதி பொருத்தமான முதலீட்டாளர் ஒருவர் முன்வந்ததன் பின்னர் முறையானதாக கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் பிரகாரம் ஏலமிடல் முறைமையின் மூலம் போட்டியாளர் மற்றும் வெளிப்படையாக கூறுவிலைகள் கோரி காணிகளை கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | அதிகாரசபைக்குச் சொந்தமான 43 களஞ்சியங்கள் 2009 ஆம் ஆண்டு முதல் நெல் சந்தைப்படுத்தும் சபையினால் பயன்படுத்தப்படுகின்ற போதிலும் அந்த களஞ்சியங்களுக்காக எந்தவொரு வாடகைப் பணமும் 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. அந்த களஞ்சியங்களில் நெல்லை களஞ்சியப்படுத்துவதற்கு நியமமிடப்பட்ட பிரகாரம் பழுதுபார்த்தல்களை செய்யும் தேவையொன்று காணப்படுகின்றமையினால் அந்த கட்டிடங்களின் உரித்து நெல் சந்தைப்படுத்தும் சபைக்கு கையளிக்குமாறு நெல் சந்தைப்படுத்தும் சபையின் தலைவரினால் மஹாவலி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகத்திடம் இருந்து கோரப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அந்த காணியை கையளிப்பதற்கோ அல்லது வாடகைப் பணத்தை அறவிடுவதற்கோ 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் தவறியிருந்தது. | அதிகாரசபையினால் வலயங்களில் பதிவு செய்துள்ள காணி நலனாளிகளுக்கு உலக உணவு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட உணவுகளை களஞ்சியப்படுத்துவதற்காக நிர்மாணிக்கப்பட்ட களஞ்சியங்களாகும். அந்த நிகழ்ச்சித் திட்டம் முடிவடைந்ததன் பின்னர் அந்த களஞ்சியங்களில் நெல் களஞ்சியப்படுத்துவதற்காக நெல் சந்தைப்படுத்தும் சபைக்கு வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நெல் சந்தைப்படுத்தும் சபையினால் அவர்கள் பயன்படுத்துகின்ற இந்த களஞ்சியம் முறையான பிரகாரம் அவர்களுக்கு கையளிக்குமாறு கோரப்பட்ட கோரிக்கையின் பிரகாரம் நெல் சந்தைப்படுத்தும் சபையினால் கோரப்பட்ட நெல் களஞ்சியம் தொடர்பான தகவல்கள் உரிய வலயங்களில் இருந்து பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அந்த தகவல்கள் மதிப்பீட்டு திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு மதிப்பீட்டு பெறுமதியை அறவிடும் அடிப்படையில் நெல் சந்தைப்படுத்தும் சபைக்கு முறையான பிரகாரம் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | களஞ்சியங்களை செயற்திறனாகவும், வினைத்திறனாகவும் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன், உரிய வாடகைப் பணமும் அறவிடப்பட வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அதிகார சபையினால் ஜீ.எஸ்.எம்.பீ தொழில்நுட்ப சேவை (தனியார்) கம்பனியுடன் 2019 ஏப்ரல் மாதம் 06 மாதங்களுக்காக உடன்படிக்கை செய்யப்பட்ட கந்தலாய் சூரியபுற தும்மோதர மணல் திட்டில் 103,128 மணல் கியூப்கள் அகற்றப்பட்டு ரூபா 61,876,800 வருமானமொன்றை உழைப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும், 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் ரூபா 12,969,960 தொகையான வருமானம் மாத்திரமே உழைக்கப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் 4 ஆம் பந்தியின் பிரகாரம் பெறப்பட்ட ரூபா 30,000,000 தொகையான வங்கிப் பிணை 2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் காலாவதியாகியிருந்த போதிலும், 2020 ஆகஸ்ட் 19 ஆன கணக்காய்வு திகதி வரையிலும் பிணை முறியின் காலம் நீடிக்கப்பட்டிருக்கவில்லை. அதற்குப் பதிலாக எதிர் வரும் மாத்தில் மணல் அகழ்வு 24,000 கியூப்களுக்காக ரூபா 14,400,000 தொகையொன்றை பெற்று உடன்படிக்கையை மீள புதுப்பிக்கப்பட்டிருந்தது. | உடன்படிக்கையின் இனக்கப்பாட்டின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் உடன்படிக்கையின் பிரகாரம் அகற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட மணல் கியூப்களின் அளவு 103,128 கியூப்கள் ஆக இருந்ததுடன், அதற்காக ரூபா 61,876,800.00 வருமானமொன்று எதிர் பார்க்கப்பட்டிருந்தது. எனினும், இந்த செயற்திட்டத்திற்காக எழுந்த எதிர்ப்பின் காரணமாக மணலை அகற்றும் நடவடிக்கைகளுக்கு முதலாவதாக வெள்ள பாதுகாப்பு பகுதியை மீளமைக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதனால் பிரதேச மணல் வியாபாரிகள் மற்றும் சிவில் அபிவிருத்தி மற்றும் விவசாய அமைப்புக்களின் மூலம் ஏற்படுத்தப்பட்ட எதிர்ப்பின் காரணமாக 2019.07.08 ஆம் திகதி வரை மணல் அகழ்வுகள் ஆரம்பிப்பதற்கு முடியாதிருந்தது. மொத்த செயற்திட்ட காலத்தில் அகற்றப்பட்ட மணல் கியூப்கள் 39,206.04 கியூப்கள் அளவு அகற்றப்பட்டிருந்ததுடன், அதற்காக ரூபா 23,523,624.00 கட்டணமொன்று அறவிடப்பட்டிருந்தது. உடன்படிக்கை இலக்கம் 04 இன் பிரகாரம் மணல் அகழ்வு ஆரம்பிப்பதற்கு முதல் எதிர்காலத்தில் ஆரம்பிக்கப்படுகின்ற | எதிர்பார்க்கப்பட்ட வருமானங்களை பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருந்ததுடன், உடன்படிக்கையின் பிரகாரம் பெறப்பட்ட வங்கி பிணைகளின் காலம் நீடிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | மணல் அகழ்வுகளுக்காக காணி பயன்படுத்தல் கட்டணமாக செலுத்த வேண்டிய கட்டணத்திற்கு காப்பீடாக ரூபா 30,000 மில்லியன் தொகையான வங்கி பிணையொன்று வைப்புச் செய்யப்பட்டிருந்தது. அகற்றப்பட்ட மணல் கியூப்களின் அளவிற்காக கட்டணங்கள் சரியாக செலுத்துவதற்கு வதிவிட வியாபார முகாமையாளரின் உறுதிப்படுத்தலின் பிரகாரம் வங்கி பிணை முறியை விடுவித்து பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. நிலத்தின் மீளமைப்பு புனர்நிர்மாணத்திற்காக பிணையொன்றை பெற்றுக் கொள்ளல் தொடர்பாக உடன்படிக்கை செய்யாதிருந்ததுடன், காணியின் புனருத்தாபன செயற்திட்டங்களை பூர்த்தி செய்யும் போது ஆலோசனைக் குழுவின் அங்கீகாரத்தின் கீழ் மேற்கொள்ள வேண்டிய உடன்படிக்கை இலக்கம் 14 இன் கீழ் காணப்பிக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | 2018 ஆம் ஆண்டு மே முதல் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்ட மொறகஹகந்த நீர் மின்சாரவலு கூடத்தின் வருமானம் 2019 ஆம் ஆண்டில் அதிகார சபையின் வருமான மதிப்பீட்டில் உள்ளடக்கப்படாதிருந்ததுடன், மீளாய்வாண்டில் அந்த மின்வலு கூடத்திலிருந்து ரூபா 647 மில்லியன் உழைக்கப்பட்டிருந்தது. மின்வலு கூடத்தின் பராமரிப்பு செலவினத்திற்காக நிதியம் ஒன்று ஏற்படுத்தப்படாதிருந்ததுடன், வருமானத்தில் எந்தவொரு நிதி ஏற்பாடும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதில் ரூபா 200 மில்லியன் தொகை 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதிகார சபையின் | 2018 ஆம் ஆண்டின் மே முதல் மின் உற்பத்தி செய்யப்பட்ட 2019 ஆம் ஆண்டிற்குரியவை 2018 திசெம்பர் மாத்தில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது. அது வரையில் இது தொடர்பாக உரிய விபரங்கள் எங்களுக்கு அறிக்கையிடப்பட்டிருக்கவி ல்லை. அதனால் அந்த வருமான மதிப்பீட்டை செய்வதற்கு முடியாதிருந்தது. மின்வலு கூடத்தின் பராமரிப்புக்காக இந்த நிதியத்திலிருந்து ஒரு பகுதியை ஒதுக்குதல் தொடர்பாக கொள்கை | சகல எதிர்பார்த்த வருமானங்களையும் உள்ளடக்கி பதிவேடு தயாரிக்க வேண்டியிருந்ததுடன், மதிப்பீடு செய்யப்படாதிருந்த சகல வருமானங்களும் திறைசேரிக்கு அனுப்பப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கையிலுள்ள பட்டியல்களை செலுத்துவதற்காக மீண்டும் பெற்றுக்கொள்ளும் அடிப்படையில் அரசாங்கத்தின் வருமானத்தில் செலவு வைக்கப்பட்டிருந்த போதிலும், ஏனையவை நிதி அங்கீகாரம் இன்றி செலவிடப்பட்டிருந்தது. | ரீதியான தீர்மானமொன்று எடுக்கப்படாமையால் எதிர்காலத்தில் உரிய பிரிவுகளுக்கு அறிவித்து கொள்கையொன்றை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். பணிப்பாளர் சபை தீர்மானத்தின் பிரகாரம் மீண்டெழும் மற்றும் மூலதன செலவினங்களுக்காக அதிகார சபையின் வருமானத்தை பயன்படுத்த முடியுமாகையால் அதன் பிரகாரம் உரிய செலவினங்கள் செய்யப்பட்டிருந்தது. | |
| (இ) | தலாவ முகாம் காணியில் 40 பேர்களை உடைய தெரிவு செய்யப்பட்ட பட்டியல் ஒன்றுக்காக காணியினை வழங்குவதற்கு திட்டமிடப்பட்ட போதிலும், 43 பேர்களுக்காக காணி அளத்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஆரம்ப தெரிவு செய்யப்பட்ட பட்டியலில் பெயர் குறிப்பிடப்படாத ஐந்து பேருக்கு காணி அளவிடப்பட்டிருந்ததுடன், ஆரம்பமாக தெரிவு செய்யப்பட்ட பட்டியல் 02 இற்கு காணி அளவிடப்பட்டிருக்கவில்லை. தலாவ முகாம் காணியில் மஹாவலி அதிகார சபையில் சேவையாற்றுகின்ற 44 உத்தியோகத்தர்களுக்காக காணிக் கூறுகள் கையளிக்கப்பட்டிருந்ததுடன், கணக்காய்வு திகதியான 2020 யூலை 07 ஆம் திகதி வரையும் அந்த காணி முறையாக உரிய நலனாளிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கவில்லை. அந்த காணியில் 15 கூறுகள் முறையற்ற வகையில் உரித்தற்று செய்யப்பட்டிருந்த போதிலும், அனுமதியற்ற உரிமைகளை அகற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. காணி தெரிவு செய்யப்பட்டு 12 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்த போதிலும், ஒரு காணி | தலாவ பிரிவில் 420/421 அலகில் தலாவ மஹாவலி முகாம் காணியில் மஹாவலி அதிகார சபையில் சேவையாற்றிய 44 உத்தியோகத்தர்களுக்கு X/EX/33 மற்றும் H/171 என்ற உப கூறிடல் மற்றும் H/EX/45 என்ற உப கூறிடல்களின் பிரகாரம் 44 பேர்களுக்காக 2009 ஆம் ஆண்டின் போது கையளிக்கப்பட்டிருந்தது. ஆரம்ப தெரிவு பதிவேட்டில் பெயர் குறிப்பிடப்படாத 05 பேர்களுக்கான காணி 2003 ஆம் ஆண்டில் பேணப்பட்ட தெரிவு பதிவேட்டை அடிப்படையாகக் கொண்டு கையளிக்கப்பட்டிருந்தது. கே.சீ.110135 பத்திரம் 26 ஆம் இலக்கத்தில் ஆரம்ப வரைபடத்தின் பிரகாரம் 51 நில கூறுகள் ஒதுக்கப்பட்டிருந்ததுடன், அந்த 44 பேர்களுக்கும் அந்த கூறுகள் கையளிக்கப்பட்டிருந்தன. மேலும், இந்த காணி அரசாங்கத்தின் காணி | அனுமதியற்ற உரித்தை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன், காணியினை குடியிருப்பு நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தாதிக்குமாயின் தெரிவு நலனாளிகளின் பட்டியல் இரத்துச் செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தவிர எஞ்சியவை குடியிருப்பு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படாதிருந்ததுடன், காணிகளில் புல் வளர்ந்து காணப்பட்டது. | கட்டளைச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டிருந்தமையால் முழுமையான மதிப்பீட்டு பணமும் செலுத்தி முடியும் வரை அவர்களுக்கு சுதந்திர விடுவிப்பு பத்திரம் வழங்குவதற்கான இயலுமை காணப்படாதிருந்ததை அறியத்தருகின்றோம். பொறுப்புக்களின் அட்டவணையின் பிரகாரம் காணிக் கூறுகள் 1571, 1582, 1588, 1598, 1600, 1572, 1591, 1573, 1606, 1554, 1549, 1548, 1578 மற்றும் 1545 என்ற காணிக் கூறுகள் முறையற்ற வகையில் உரித்தற்று செய்யப்பட்டிருந்ததுடன், அந்த காணிகளின் ஆரம்ப காணி உரித்தாயினை இரத்துச் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம். இந்த காணி உரித்தாளிகள் வலயங்களில் சேவையாற்றுகின்றமையும் காணி உரித்தாளிகள் ஏனைய பிரதேசங்களில் குடியிருக்கின்றமை மற்றும் அவர்கள் இந்த காணி அபிவிருத்தி செய்யப்படாதிருந்தமையினால் இந்த காணி அபிவிருத்தி செய்யுமாறும், நிலுவை வரி வாடகைப் பணத்தை செலுத்துமாறும் எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ஈ) | தமுத்தேகம வதிவிட வியாபார முகாமைத்துவ அதிகார பிரதேசத்தில் அமைந்துள்ள கருங்கல் அகழ்வு அனுமதிப்பத்திரங்களின் 08 இனை தெரிவு பரிசோதனை செய்தபோது புவிச்சரிதவியல், அளவை மற்றும் சுரங்கங்கள் பணியகத்திற்கு 75,973.8 கியூப் கருங்கல் இற்காக அரசிறை செலுத்தப்பட்ட | தமுத்தேகம வதிவிட வியாபார முகாமைத்துவ முகாமையளர் அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள கருங்கல் அகழும் செயற்திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட காணிகளுக்கு இடையே 08 அகழ்வு அனுமதிப் | அகழ்வு அனுமதிப்பத்திரம் தொடர்பாக முறையான பரிசோதனையொன்று மேற்கொண்டு கருங்கல் அளவினை சரியான கணிப்பிட்டு உரிய காணிகளை பயன்படுத்தும் |

போதிலும், மஹாவலி அதிகார சபையின் தமுத்தேகம வதிவிட வியாபார முகாமைத்துவ அலுவலகத்தினால் 8,369.5 கியூப் கருங்கல் அளவிற்காக கட்டணம் அறவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் உழைக்கக் கூடியதாக இருந்த ரூபா 66,127,150 தொகையான வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

பத்திரங்களுக்குரிய செயற்திட்டங்களின் காணிகளை பயன்படுத்தும் கட்டணம் 8,369.5 கியூப் அளவிற்கு மாத்திரமே அறவிடப்பட்டிருந்தமை காண்பிக்கப்பட்டிருந்தது. உரிய தெரிவினை கணிப்பிட்டு மேற்கொள்ளப்பட்ட அந்த செயற்திட்ட நடவடிக்கைகள் இலங்கை மஹாவலி அதிகார சபையின் முறையான அங்கீகாரம் கிடைத்த ஆண்டுகளில் இருந்தாகும். எனினும் இலங்கை மஹாவலி அதிகார சபை மூலம் காணியினை பயன்படுத்தும் கட்டண அறவிடல் புவிச்சரிதவியல், அளவை மற்றும் சுரங்கங்கள் பணியகத்திற்கு செலுத்தப்படுகின்ற அகழ்வு அளவின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தமை LUP/01/01/2019 சுற்றறிக்கையின் மூலம் காண்பிக்கப்பட்டுள்ளதுடன், அதற்கு முன்னர் பயன்படுத்தப்பட்ட சுற்றறிக்கைகளில் அவ்வாறு காண்பிக்கப்படவில்லை. அதன் பிரகாரம் அவ்வப்போது விநியோகிக்கப்பட்ட உள்ளக சுற்றறிக்கைகளின் பிரகாரமும் அந்த கியூப் அளவின் கணிப்பிடப்படுவது 4/cs/3/10/பொது என்ற சுற்றறிக்கையை அடிப்படையாகக் கொண்டாகும். அதன் பிரகாரம் ஓட்டர் ஜெல் 01 கிலோ கிராமில் கருங்கல் 2.5 கியூப் எடுக்கப்பட்டிருந்தமை

கட்டணம் அறவிடப்பட வேண்டும்.

| | | |
|---|---|---|
| | நிர்ணயிக்கப்பட்டிருந்தது. புவிச்சரிதவியல், அளவை மற்றும் சுரங்கங்கள் பணியகத்திலிருந்து உரிய தகவல்கள் கோரப்பட்ட போதிலும், இது வரையிலும் தகவல்கள் எனக்கு கிடைக்கப் பெறவில்லை. தகவல்கள் கிடைத்ததன் பின்னர் அந்த நிலுவை கியூப் அளவிற்குரிய செயற்திட்டதார்களிடம் இருந்து நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |

**3.3 விளைவற்ற அல்லது குறைவாக பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டில் ரூபா 8,550,788 தொகை செலவில் பழுதுபார்க்கப்பட்டிருந்த கொத்மலை பணிப்பொறுப்பு பொறியியலாளர் அலுவலகத்திற்கு சொந்தமான பாரம் தூக்கி இயந்திரம் சரியான பிரகாரம் பழுதுபார்க்கப்படாமையின் காரணமாக 2018 முதல் 2020 மே வரை செயற்பாடற்று காணப்பட்டது. | 2018 ஆம் ஆண்டின் போது உரிய ஹைட்ரொலிக் முறைமை பழுதுபார்ப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதும், நிதி ஏற்பாடு வரையறுக்கப்பட்டமையினால் நிதி ஏற்பாட்டு கிடைக்காமையினால் அந்த பணிகளை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது. அதன் பிரகாரம் 2019 ஆம் ஆண்டின் வருடாந்த வேலைத் திட்டத்திலும் இந்த இயந்திரத்தை ஹைட்ரொலிக் முறைமையை பழுதுபார்ப்பதற்காக நிதி ஒதுக்குவதற்கு முடியாதிருந்தது. 2020 ஆம் ஆண்டின் வேலைத் திட்டத்திலும் கோரப்பட்ட போதிலும், இந்த ஆண்டின் இடைக்கால அங்கீகரிக்கப்பட்ட நான்கு கணக்குகளின் மூலம் ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாட்டு முன்னைய ஆண்டுகளை விட வரையறுக்கப்பட்டமையினால் இந்த பணிகளை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது. | சரியான பிரகாரம் பழுதுபார்த்து பயன்படுத்தப்பட வேண்டும். |

## 3.4 செயற்திட்டம் அல்லது மூலதன வேலைகளின் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கொத்மலை பணிப்பொறுப்பு பொறியியலாளர் அலுவலகத்தில் பழைய மணல் மாதிரிகள் அகற்றப்பட்டிருந்ததுடன், புதிய மணல் மாதிரிகளை தயாரித்தல் மற்றும் காணப்படுகின்ற ஒடுக்கமான மேடையினை மீளமைப்பதற்காக 2017 ஆம் ஆண்டில் ரூபா 6,990,000 தொகையில் ஒப்பந்தமொன்று கையளிக்கப்பட்டிருந்தது. ரூபா 2,060,000 தொகை செலவில் நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த மணல் மாதிரி 2020 மே வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு அனுப்பப்பட்டுள்ளது. | சட்டரீதியான நடவடிக்கைகளின் பிரகாரம் மிகுதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 3.5 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2015 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட உத்தரவாத காலத்தை விஞ்சாதிருந்த 21 வளிப்பதனாக்கி இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்ட நிறுவனத்தின் மூலம் பழுதுபார்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் பாவனையில் இருந்து அகற்றப்பட்டு அந்த நிறுவனத்திலேயே மீளாய்வாண்டின் போது ரூபா 3,367,971 தொகையில் 22 வளிப்பதனாக்கி இயந்திரங்கள் மீண்டும் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே இந்த கொள்வனவுகள் வருடாந்த பெறுகைத் திட்டத்தில் உள்ளடக்கவும் பட்டிருக்கவில்லை. | வளிப்பதனாக்கி இயந்திரங்கள் செயற்பாடற்று காணப்படும் போது அதற்கு செய்யவேண்டிய பழுதுபார்த்தல்கள் செலவாகின்ற பணம் கொள்வுனவு செய்யப்பட்ட திகதி இயந்திரத்தின் உத்தரவாத காலம் கம்ரஸரின் பொறுப்பு உத்தரவாத காலம் போன்ற விடயங்கள் சகலதும் கவனத்தில் கொண்டு பொருத்தமான பிரகாரம் முகவர் நிறுவனத்தில் இருந்து அல்லது வெளி நிறுவனத்தில் இருந்தோ பழுதுபார்ப்பதற்கு அல்லது புதிதாக பொருத்துவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். சில இயந்திரங்கள் 15 – 20 வருடங்களுக்கு இடையிலான காலம் தொழில்நுட்ப கோளாறுகள் அல்லது பிரச்சினைகள் இன்றி பயன்படுத்த முடியுமாகும். | உத்தரவாத காலத்தில் பழுதுபார்த்தல்கள் உரிய வழங்குனர்களின் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்ததுடன், தரமானதும் பொருளாதார ரீதியில் நலன் வாய்ந்ததுமான பொருட்கள் வழங்குனர்களிடம் இருந்து தெரிவு செய்வதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | | இந்த நிலைமையின் அடிப்படையில் வருடத்தின் போது கொள்வனவு செய்யப்பட்ட வளிப்பதனாக்கி எண்ணிக்கைகள் பதியப்படாதிருந்ததுடன், பொது பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள பணம் இதற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. |

### 3.6 ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ரம்புக்கன் ஓயா வலயத்தில் பொல்லேபெத்த உத்தியோகபூர்வ இல்லங்களை நிர்மாணிப்பதற்காக 2017 ஆம் ஆண்டில் ரூபா 4,861,105 தொகையான ஒப்பந்த உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன், முற்பணமாக ரூபா 1,243,051 தொகை செலுத்தப்பட்டிருந்தது. ஒப்பந்த காலம் 02 சந்தர்ப்பங்களின் போது 2018 திசெம்பர் 28 வரை நீடிக்கப்பட்டிருந்த போதிலும், அத்திகதியில் வேலை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. 2018 நவம்பர் 20 ஆம் திகதி செயலாற்றல் பிணைமுறியின் செல்லுபடிக் காலம் முடிவடைந்திருந்த போதிலும், அந்த செல்லுபடி காலம் நீடிக்கப்பட்டிருக்கவில்லை. 2019 மார்ச் 14 ஆம் திகதி ஒப்பந்தம் கைவிடப்பட்டிருந்ததுடன், தாமதக் கட்டணம் ரூபா 486,110 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. ஒப்பந்தகாரருக்கு மேலதிகமாக செலுத்தப்பட்ட ரூபா 1,402,376 தொகை 2020 | ஒப்பந்தம் 2017 திசெம்பர் 23 ஆம் திகதி உரிய நிறுவனத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. இதன் போது ஒப்பந்த காலம் 150 நாட்களாக இருந்ததுடன், இந்த ஒப்பந்தத்தின் வேலை நடவடிக்கைகள் மேற்கூறப்பட்ட பெயர் குறிப்பிடப்பட்ட ஒப்பந்த நிறுவனத்தினால் 2017 திசெம்பர் 05 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்தது. ஒப்பந்த கம்பனி வேலை ஆரம்பிக்கும் முற்பணமாக ரூபா 1,458,331.65 தொகையொன்றை கோரியிருந்த போதிலும், அதில் ரூபா 1,243,051.56 முற்பணத்தொகை 2017 திசெம்பர் 27 ஆம் திகதி செலுத்தப்பட்டிருந்தது. மேற்கூறப்பட்ட ஒப்பந்தத்தின் வேலை தாமதமானமை தொடர்பாக 2018 மார்ச் 29 ஆம் திகதிய கடிதம் மூலம் உரிய ஒப்பந்தகார நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. ஒப்பந்தத்தின் வேலை நடவடிக்கைகள் 2018 மே 06 ஆம் திகதி பூர்த்திசெய்ய வேண்டியிருந்தமையினால் ஒப்பந்தத்திற்கு உரிய செயலாற்றல் பிணை முறி மற்றும் வேலை ஆரம்பித்தல் முற்பண பிணை முறி என்பவற்றை நீடிப்பதற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒப்பந்தகாரரால் | ஆற்றப்பட்ட வேலைகளின் அளவை விஞ்சி ஒப்பந்தகாரருக்கு மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளை இனங்கண்டு அந்த அளவினை அளவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் விரைவாக எடுக்க வேண்டியிருந்ததுடன், ஒப்பந்தகாரரை கறுப்பு பட்டியலில் சேர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

ஆகஸ்ட் 17 ஆம் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. ஒப்பந்தகாரரை கறுப்பு பட்டியலில் உள்ளடக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

முற்பண பிணை முறியின் செல்லுபடிக் காலம் 2018 செப்தெம்பர் 15 வரை நீடிக்கப்பட்டிருந்தது. இந்த ஒப்பந்தத்தின் வேலை நடவடிக்கைகள் உரிய தினத்தில் பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தமையினால் 2018 ஒக்தோபர் 10 ஆம் திகதி வரை ஒப்பந்த காலத்தை நீடித்து தருமாறு 2018 யூலை 09 ஆம் திகதிய கடிதம் மூலம் கோரப்பட்டிருந்த போதிலும், 2018 செப்தெம்பர் 20 ஆம் திகதி வரை மாத்திரம் ஒப்பந்த காலம் நீடிக்கப்பட்டிருந்தது. 2018 யூலை 23 ஆம் திகதி நடைபெற்ற செயல் முன்னேற்ற மீளாய்வு கூட்டத்தின் போது இந்த ஒப்பந்தத்தின் பௌதீக செயல் முன்னேற்றம் 18 சதவீதம் ஆனமையினால் ஒப்பந்தகாரருக்கு கூடிய விரைவில் இந்த செயற்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. 2018 நவம்பர் 21 ஆம் திகதிய கடிதம் மூலம் இந்த ஒப்பந்தத்தின் செயல் முன்னேற்றம் தொடர்பாக ஏற்றுக்கொள்வதற்கு முடியாத நிலைமையொன்று காணப்பட்டதாக பிரதான அலுவலகம் அறிவித்திருந்தது. அந்த கடிதத்தின் பிரகாரம் பிரதான அலுவலகத்தின் மூலம் ஒப்பந்தகாரருக்கு இரண்டு வாரங்களுக்குள் வேலைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. மேலும் 2019 பெப்ரவரி 07 ஆம் திகதிய கடிதம் மூலம் ஒப்பந்தகாரர் வேலை நடவடிக்கைகளை ஆரம்பிக்காதிருந்தமை பிரதான அலுவலகத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பிரதான அலுவலகத்தின் மூலம் இந்த ஒப்பந்தத்தின் வேலை நடவடிக்கைகள் இரத்துச் செய்யப்பட்டிருந்தது. மேலும் 2018 செப்தெம்பர் 12 ஆம் திகதிய கடிதம் மூலம் ஒப்பந்தகாரருக்கு உரிய செயலாற்றல் பிணை முறி

| | | | |
|---|---|---|---|
| | | மற்றும் முற்பண பிணை முறி என்பவற்றின் பணத்தை அறவிடுவதற்கு நிர்மாண பாதுகாப்பு நிதியத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. | |
| (ஆ) | ரம்புக்கன் ஓயா வலயத்தில் மஹாஓயா உத்தியோகபூர்வ இல்லங்களை நிர்மாணிப்பதற்கு 2017 ஆம் ஆண்டில் ரூபா 4,843,185 தொகையான ஒப்பந்த உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன், முற்பணமாக ரூபா 1,414,555 தொகை செலுத்தப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக 2019 மார்ச் 14 ஆம் திகதி ஒப்பந்தம் கைவிடப்பட்டிருந்தது. செயலாற்றல் பிணைமுறி மற்றும் முற்பண பிணைமுறியின் காலம் 2018 செப்தெம்பர் 15 ஆம் திகதி முடிவடைந்திருந்த போதிலும், அவைகளின் காலத்தை நீடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. ஒப்பந்தகாரரிடம் இருந்து அறவிட வேண்டிய ரூபா 1,242,997 தொகை 2020 ஆகஸ்ட் 17 ஆம் திகதி வரையிலும் அறவிடப்படாதிருந்ததுடன், ஒப்பந்தகாரரை கறுப்பு பட்டியலில் உள்ளடக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த ஒப்பந்தம் 2017 நவம்பர் 14 ஆம் திகதி உரிய நிறுவனத்திற்கு ரூபா 4,843,185 தொகையில் கையளிக்கப்பட்டிருந்தது. இந்த ஒப்பந்த காலம் 150 நாட்களாக இருந்ததுடன், ஒப்பந்தத்தின் வேலை நடவடிக்கைகள் 2017 திசெம்பர் 06 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்தது. 2017 திசெம்பர் 17 ஆம் திகதி கடிதம் மூலம் முற்பண தொகையான ரூபா 1,417,556 தொகை கோரப்பட்டிருந்த போதிலும், அதில் ரூபா 1,414,556 தொகை மாத்திரம் செலுத்தப்பட்டிருந்தது. மேற்கூறப்பட்ட ஒப்பந்தத்திற்குரிய வேலை நடவடிக்கைகள் தாமதம் அடைந்தமையினால் 2018 மார்ச் 29 ஆம் திகதிய கடிதம் மூலம் உரிய ஒப்பந்த நிறுவனத்திற்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. ஒப்பந்தத்தை பூர்த்தி செய்வதற்கு முடியாமையினால் 50 நாட்கள் ஒப்பந்தத்தை நீடித்துத் தருமாறு கோரப்பட்ட ஒப்பந்த காலம் 2018 செப்தெம்பர் 20 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டிருந்தது. இந்த ஒப்பந்தத்திற்குரிய 2018 யூலை 23 ஆம் திகதிய செயல்முன்னேற்ற மீளாய்வு கூட்டத்தின் போது பௌதீக செயல்முன்னேற்றம் 17 சதவீதம் ஆக இருந்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது. அதனால் மிகவும் விரைவாக ஒப்பந்தத்தின் வேலை நடவடிக்கைகளை பூர்த்தி செய்யுமாறு அறிவிக்கப்பட்டிருந்தது. 2018 செப்தெம்பர் 12 ஆம் திகதிய கடிதம் மூலம் நிர்மாண பாதுகாப்பு நிதியத்திற்கு செயலாற்றல் பிணை முறியின் பணத்தை அறவிடுமாறு அறிவிக்கப்பட்டிருந்தது.<br><br>பிரதான அலுவலகத்தின் மூலம் 2018 திசெம்பர் 11 ஆம் திகதிய | ஆற்றப்பட்ட வேலை அளவை விஞ்சி ஒப்பந்தகாரருக்கு மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளை இனங்கண்டு அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகளை விரைவாக எடுக்க வேண்டியிருந்ததுடன், ஒப்பந்தகாரர் கறுப்பு பட்டியலில் சேர்க்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | கடிதம் மூலம் இரண்டு வாரங்களுக்குள் வேலை நடவடிக்கைகளை ஆரம்பிக்குமாறு ஒப்பந்தகாரருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தத்தின் வேலை நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு முடியாமையினால் 2019 மார்ச் 14 ஆம் திகதிய கடிதம் மூலம் இந்த ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டதாக உரிய ஒப்பந்தகார நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. | |
| (இ) | ரம்புக்கன் ஓயா வலயத்தில் 10 அறைகளை உடைய வீட்டுத் தொகுதியொன்றை நிர்மாணிப்பதற்காக 2017 ஆம் ஆண்டில் ரூபா 13,837,634 தொகையில் ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. செயலாற்றல் பிணைமுறியினதும், முற்பண பிணைமுறியினதும் காலம் 2019 பெப்ரவரி 28 ஆம் திகதி முடிவடைந்திருந்த போதிலும், அவற்றின் காலத்தை நீடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. வழங்கப்பட்டுள்ள வேலை ஆரம்பித்தல் முற்பணத் தொகையில் ரூபா 1,311,158 தொகை மேலும் அறவிட வேண்டி காணப்பட்டது. நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் இலக்கம்: ICTAD/SBD/01 என்ற கூற்றின் 59.2 ஆம் பிரிவின் பிரகாரம் பொறியியலாளரின் அனுமதியின்றி 28 நாட்கள் முழுவதும் வேலை நிறுத்தப்பட்டு நிர்மாணத்திற்குரிய ஒப்பந்தகாரரின் சேவை முடிவுறுத்தப்பட வேண்டியிருந்த போதிலும், அதிகார சபையினால் 2020 வரையிலும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த ஒப்பந்தத்தின் ஒப்பந்த காலம் 5 சந்தர்ப்பங்களின் போது நீடிக்கப்பட்டிருந்ததுடன், 2019.01.31 ஆம் திகதி வரை செல்லுபடியாக காணப்பட்டது. மேற்கூறப்பட்ட ஒப்பந்தத்திற்குரிய முற்பண பிணைமுறி மற்றும் செயலாற்றல் பிணைமுறியின் செல்லுபடி காலமும் 2018 திசெம்பர் 28 வரை நீடிக்கப்பட்டிருந்தது. இந்த ஒப்பந்தத்திற்காக நான்கு கட்டங்களின் கீழ் பட்டியல்கள் செலுத்தப்பட்டிருந்ததுடன், அதன் பெறுமதி ரூபா 8,179,315.00 ஆகும். அந்த கொடுப்பனவுகளின் போது வேலை ஆரம்பிப்பு முற்பணத்தில் ரூபா 2,788,842.00 தொகை தீர்க்கப்பட்டிருந்ததுடன், மேலும் ரூபா 1,311,158.00 தொகை அறவிட வேண்டியிருந்தது. இந்த நிர்மாணங்கள் தொடர்பான கட்டங்களை பரீட்சித்த போது வழங்கப்பட்டுள்ள முற்பணத்தை தீர்த்து வைப்பதற்கு முடியுமான வகையில் வேலைப் பகுதியொன்று அவர்களினால் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என்பதையும் மேலும் அறியத்தருகின்றோம். | ஆற்றப்பட்ட வேலை அளவை விஞ்சி ஒப்பந்தகாரருக்கு மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளை இனங்கண்டு அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகளை விரைவாக எடுக்க வேண்டியிருந்ததுடன், ஒப்பந்தகாரரின் சேவையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | வளவ வலயத்தில் மூறவெசிஹேன பிரிவில் அலுவலகத்தை நிர்மாணிப்பதற்காக 2018 ஆம் ஆண்டில் ரூபா 14,757,550 தொகையில் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன், முற்பணமாக ரூபா 4,323,015 தொகை செலுத்தப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக 2020 சனவரி 22 ஆம் திகதி ஒப்பந்தம் கைவிடப்பட்டிருந்தது. எனினும் ஒப்பந்தகாரரின் கோரிக்கையின் அடிப்படையில் மீண்டும் 6 வாரங்கள் காலம் நீடிக்கப்பட்டிருந்தது. 2020 ஆகஸ்ட் 17 ஆம் திகதி வரையிலும் வேலை பூர்த்தி செய்யப்படாதிருந்ததுடன் ஒப்பந்தகாரரிடம் இருந்து ரூபா 3,150,256 தொகையான வேலை ஆரம்பிப்பு முற்பணம் அறவிட வேண்டி காணப்பட்டது. | இந்த ஒப்பந்தத்தின் செயற்பாடுகள் 2019 மே மாதம் 25 ஆம் திகதி பூர்த்தி செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் நடவடிக்கைகளின் செயல்முன்னேற்றம் ஒன்று அவதானிக்கப்படாமையினால் நிறுவனத்திற்கு அது தொடர்பாக அறிவிக்கப்பட்டு 2019 யூன் 06 ஆம் திகதி கடிதம் ஒன்று அனுப்பப்பட்டிருந்தது. 2019 செப்தெம்பர் 20 ஆம் திகதி நிர்மாண பாதுகாப்பு நிதியத்தின் மூலம் செயலாற்றல் பிணைமுறி 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டிருந்தது. 2019 மே மாதம் 17 ஆம் திகதி 03 சந்தர்ப்பங்களின் போது நியாயமான காரணங்களை கவனத்தில் கொண்டு 2019 நவம்பர் 30 ஆம் திகதி அறிவித்து இந்த ஒப்பந்த காலம் நீடிப்பு வழங்கப்பட்டிருந்தது. 2019 திசெம்பர் 05 ஆம் திகதி செயற்திட்டத்தின் வேலைகளை கைவிடுவதற்காக இறுதி அறிவித்தல் ஒன்று அனுப்பப்பட்டிருந்ததுடன், அதன் பிரகாரம் விரைவாக செயற்திட்டம் திட்டமிடப்பட்டு பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவிக்கப்பட்டிருந்தது. 2020 பெப்ரவரி 19 ஆம் திகதி நடைபெற்ற செயல்முன்னேற்ற மீளாய்வு கூட்டத்தின் போது நிர்மாண பாதுகாப்பு நிதியம் மற்றும் ஒப்பந்தகாரரும் கலந்துரையாடியதன் பிரகாரம் 06 வாரங்களில் வேலையை பூர்த்திசெய்வதற்கு இணங்கியிருந்தனர். மேலும் 2020 மே 14 ஆம் திகதி செயலாற்றல் பிணைமுறி மற்றும் முற்பண பிணைமுறி என்பவற்றை புதுப்பபிப்பதற்காக நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் வேலை நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்காக கடிதம் ஒன்று 2020 மே 14 ஆம் திகதி நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டிருந்தது. இந்த | காலத்தை நீடிப்பதன் மூலம் வேலைகளை பூர்த்திசெய்ய முடியாதாயின் உடன்படிக்கையை பூர்த்தி செய்து உரிய காப்புறுதிகளை பணமாக்கிக் கொள்ள வேண்டியிருந்ததுடன், ஆற்றிய வேலை அளவினை விஞ்சி ஒப்பந்தகாரருக்கு மேற்கொள்ளப்பட்டுள்ள கொடுப்பனவுகளை இனங்கண்டு இந்த அளவினை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் விரைவாக எடுக்கப்பட வேண்டும். |

செயற்திட்டத்திற்குரிய முற்பண பிணைமுறி மற்றும் செயலாற்றல் பிணைமுறி என்பவற்றை 2020 திசெம்பர் 31 ஆம் திகதி நீடிக்கப்பட்டு அதற்குரிய ஆவணங்கள் நிர்மாண பாதுகாப்பு நிதியத்தின் மூலம் தற்போது வழங்கப்பட்டுள்ளது.

### 3.7 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதிகார சபையின் சிரேஷ்ட முகாமைத்துவ நிலையில் 35 பதவிகளில் 16 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன், அதில் 12 பேர்கள் பதில்கடமை மேவுகை, ஒப்பந்த பணி கையளித்தல் மற்றும் இரண்டாம் அடிப்படையில் வெற்றிட பதவிகளின் கடமைகளை நிறைவேற்றியிருந்தனர். அதிகார சபையினால் அவ்வப் போது சிரேஷ்ட முகாமைத்துவ நிலையில் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்த போதிலும், ஆட்சேர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமையினால் வெற்றிடங்கள் நீண்ட காலமாக முழுமையான நிரப்புவதற்கு முடியாதிருந்தது. மேலும் மத்திய முகாமைத்துவ நிலையில் 148 வெற்றிடங்கள் மற்றும் செயற்பாட்டு முகாமைத்துவ நிலையில் 349 வெற்றிடங்கள் என்பன காணப்பட்டன. | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதிகார சபையின் சிரேஷ்ட முகாமைத்துவ நிலையில் 35 பதவிகளில் 16 வெற்றிடங்கள் காணப்பட்ட போதிலும், அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்த போதிலும், தேர்தல் கால் எல்லையில் ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முடியாத அடிப்படையில் அதில் 12 பதவிகளுக்காக பதிற்கடமை கடமை, மேவுகை, ஒப்பந்த அடிப்படையில் பணிப் பொறுப்பு கையளித்தல் அடிப்படையிலும் இரண்டாம் நிலை அடிப்படையிலும் உத்தியோகத்தர்கள் நியமிப்பதன் மூலம் வெற்றிடமான பதவிகளின் கடமைகள் தொடர்ச்சியாக நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. மீண்டும் இலங்கை மஹாவலி அதிகார சபையின் திட்ட சிரேஷ்ட முகாமைத்துவ நிலையிலும், மத்திய முகாமைத்துவ நிலையிலும் மற்றும் செயற்பாட்டு முகாமைத்துவ நிலையிலும் வெற்றிடமாக காணப்பட்ட 54 பதவிகளுக்காக உள்ளக விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தது. இந்த விண்ணப்ப கோரலின் போது அடிப்படை தகைமைகளை பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்களுக்காக நேர்முக பரீட்சை விரைவாக நடாத்துவதற்கு ஆயத்தம் செய்யப்பட்டுள்ளது என்பதை தயவுடன் மேலும் அறியத்தருகின்றோம். அந்த பதவி வெற்றிடங்களை நிரப்புவதுடன் காண்பிக்கப்பட்டுள்ள பிரச்சினைக்குரிய நிலைமைகளுக்கான தீர்வாக இருக்கும் என தயவு செய்து அறியத்தருகின்றோம். | சிரேஷ்ட முகாமைத்துவ நிலையில் பதவிகளுக்காக நிரந்தர உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்பட வேண்டும். |

### 3.8 வாகன முறைமை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| அதிகார சபைக்குச் சொந்தமான 11 வாகனங்கள் வெளித்தரப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டின் பின்னர் வாகனங்களை விற்றுத் தீர்த்தல் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன், விற்றுத் தீர்க்கப்பட வேண்டிய வாகனங்கள் சரியான சந்தர்ப்பங்களின் போது விற்றுத் தீர்க்கப்படாமையினால் 64 வாகனங்கள் ரூபா 1,577,100 தொகையான மதிப்பீட்டு தொகையில் பாகங்களாக விற்பனை செய்வதற்கு பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. | 35 வருடங்களுக்கு மேற்பட்ட பழைமையான இந்த வாகனங்களில் காணப்படுகின்ற கோளாறுகளினால் (செசி துருப்பிடித்திருந்தமை, உடைந்திருந்தமை மற்றும் மங்கலாக இருந்தமை) பெருந்தெருக்களில் ஓடக் கூடிய நிலைமையில் காணப்படாமல், கராஜ்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தமையால் வாகனங்களாக விற்றுத் தீர்க்க முடியாமல் கூறுகளாக விற்பனை செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே சொத்துக்கள் முகாமைத்துவம் 2018 திசெம்பர் 31 ஆம் திகதிய 04/2018 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் 1.3.3 ஆம் பிரிவின் பிரகாரம் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் அங்கத்தவர் ஒருவர் சகல வலயங்களுக்கும் வழங்குதல் தாமதமடைந்தமையினால் உரிய சந்தர்ப்பத்தின் போது விற்றுத் தீர்க்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதிருந்தது. எதிர்காலத்தில் இவ்வாறான நிலைமைகள் ஏற்படாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ள வாகனங்களை மீண்டும் அதிகாரசபைக்கு பெற வேண்டியிருந்ததுடன், உரிய சந்தர்ப்பத்தின் போது விற்றுத் தீர்க்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |